நகராட்சி அலுவலகம்,

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.

நாள் 20/07/2024

## <u>சாதரணக் கூட்டம்</u>

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் எதிர்வரும் **2024**ம் வருடம் **ஜீலை** மாதம் 25 ம் தேதி **காலை** 10.30 மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**<u>பொருள் எண்.1</u>**

விக்கிரமசிக்னபுரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண் 13 பகுதியில் அமைந்துள்ள, அகஸ்தியர் அருவியானது, தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலாதளங்களில் ஒன்றாக செயல்பட்டு வருகிறது. இந்த அருவியில் ஆண்டு முழுமைக்கும் தண்ணீர் வருவதால், நாள் தோறும் சுற்றுலா பயணிகள் அதிகளவில் வந்து செல்கின்றனர். மேலும் இந்நகர் பகுதியில் அமைந்துள்ள பாபநாச திருக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் இந்நகர் பகுதியில் உள்ள பொது மக்கள் மேற்கண்ட அகஸ்தியர் அருவிக்கு நாள் தோறும் சென்று வருகின்றனர், மேலும் அருவியின் அருகாமையில் நீர் மின் நிலையம் அமையப்பெற்றுள்ளது. மேற்கண்ட பகுதியானது முற்றிலும் வனத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது., வனத்துறையினர் மூலம் அருவிக்கு செல்லும் சுற்றுலா பயணிகளிடமிருந்து வாகனத்திற்கு, மற்றும் குளிப்பதற்காக செல்லும் நபர்களுக்குஎன தனித்தனியாக கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இருப்பினும் மேற்கண்ட பகுதியில் பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளான உடை மாற்றும் அறை, கழிப்பறை, மற்றும் சாலை வசதிகள் ஏதும் மேற்கொள்ளப்படாமல் உள்ளதால், பொது மக்கள் மற்றும் சுற்றுலாபயணிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். அருவிக்கு செல்லும் சாலையானது இந்நகராட்சி மூலம் கடந்த 2015 ஆண்டு புதியதாக போடப்பட்டது அதன் பின்னர் 10 ஆண்டுகள் ஆன நிலையில் மேற்கண்ட சாலையினை சீர் அமைக்க வனத்துறையினர் மூலம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை, சாலையினை நகராட்சி மூலம் பரரமரிக்கும் பணி மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படவில்லை. இவ்வளவு சிறப்பு வாய்ந்த , திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றலா தளங்களில் ஒன்றான அகஸ்தியர் அருவி பகுதியில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏதுமில்லை என்பதால், சுற்றுலா பயணிகளும், பொது மக்களும் மிகவும் சிரமப்படுவதோடு அதிருப்தியில் உள்ளனர், மேலும் மேற்கண்ட பகுதி நகராட்சி எல்லைக்குள் வார்டு எண் 13 அமையப்பெற்றுள்ளதால், நகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொண்டு தர வேண்டி பல கோரிக்கைகள் மற்றும் விண்ணப்பங்கள் பொதுமக்கள் மற்றும் சமுதாய ஆர்வலர்களிடமிருந்து வரப்பெறுகிறது. எனவே சுற்றுலா பயணிகள், பொதுமக்களின் நலன் கருதி, அகஸ்தியர் அருவி பகுதியில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான, சாலை அமைத்தல், கழிவறை, மற்றும் பெண்கள் உடைமாற்றும் அறை அமைத்தல் பணி மேற்கொள்ளவும், அதற்கான பராமரிப்பினை நகராட்சி மூலமே செய்து கொள்ள வேண்டியும், உரிய தடையின்னை சான்று மற்றும் பணி மற்றும் பராமரிப்புகள் மேற்கொள்ள அனுமதி யும் வழங்க வேண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், மற்றும் வனத்துறை யினருக்கும் கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

அகஸ்தியர் அருவி பகுதியானது திருநெல்வேலி மாவட்டதில் அமையப்பெற்றுள்ள முக்கிய சுற்றுலா தளமாக உள்ளதாலும், சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்களின் நலன் கருதி, மேற்கண்ட அருவி பகுதியில் அடிப்படை வசதிகளான சாலை, கழிப்பறை, மற்றும் உடை மாற்று அறை அமைக்கும் பணி மேற்கொள்ளவும் அதற்கான பராமரிப்பு பணி களை நகராட்சி மூலமே மேற்கொள்ள வேண்டி உரிய தடையின்மை சான்று மற்றும் , அனுமதி வேண்டி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மற்றும் வனத்துறையினருக்கு உரிய கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 420 / கருத்துரு அனுப்ப அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 21 வார்டு பகுதிகளிலும், வீடு வீடாக டெங்கு ஒழிப்பு பணி மேற்கொள்ள,மற்றும் இதர பொது சுகாதார திடக்கழிவு மேலாண்மை பணிகளை செய்ய ஆட்கொன்ர்வு வெளிமுகமை மூலம் (Outsourcing) டெங்கு கொசுப்புழு அழிக்கும் பணிக்கு பணியாட்கள் அமர்த்தி பணி மேற்கொள்ளும் பொருட்டு ,இந்நகராட்சி மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் 1453/2020/ஹெச்1 நாள் 22.02.221 ன் படி ஒப்பந்தக்காரர் சரோம்என்விரோ பிரைவேட் லிமிட்டட் (Saram, Enviro Private Ltd) நிறுவனத்திற்கு 01.03.2021 முதல் மூன்றாண்டு காலம் பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட ஒப்பந்தக்காரருக்கு வழங்கிய பணி உத்திரவு காலம் கடந்த 29/02/2024 உடன் முடிவடைகிறது. பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசியம் மற்றும் அவசரம் கருதியும், ஏறுகனவே ஒப்பந்தப்பள்ளி கோரப்பட்டு 3 ஆண்டு காலம் பணி மேற்கொண்டு வரும் சரோம்என்விரோ பிரைவேட் லிமிட்டட் (Saram, Enviro Private Ltd) நிறுவனம் தனது பணி காலத்தில், பொது சுகாதார பணிகளான டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மற்றும் இதர திடக்கழிவு மேலாண்மை பணிகளை நல்ல முறையில் செய்து வருவதாக பொது சுகாதார ஆய்வாளர் அவர்களின் குறிப்புரையின் அடிப்படையில், மேற்கண்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தக்காலத்தினை மேலும் ஆறு (6 மாதம்) மாதக்காலம் 01.03.2024 முதல் 31.08.24 நீட்டித்து, ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள விலைவிகதத்தின் படி பணி மேற்கொள்ள அனுமதிக்க வேண்டி மன்றத்தின் அனுமதிக்.கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுசுகாதார டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மற்றும் இதர திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசியத்தினை கருத்திற்குகொண்டு, பொது மக்களி ன் நலன் கருதியும், ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் வரும் சரோம்என்விரோ பிரைவேட் லிமிட்டட் (Saram, Enviro Private Ltd) நிறுவனம் தனது பணி காலத்தில், பொது சுகாதார பணிகளான டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மற்றும் இதர திடக்கழிவு மேலாண்மை பணிகளை நல்ல முறையில் செய்து வருவதாக பொது சுகாதார ஆய்வாளர் அவர்களின் குறிப்புரையின் அடிப்படையிலும், மேற்கண்ட நிறுவனத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள விலைவிகதத்தின் படி மேலும் ஆறு (6 மாதம்) மாதக்காலம் அதாவது 01.03.2024 முதல் 31.08.24 வரை ஒப்பந்தக்காலத்தினை நீட்டித்து பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**தீர்மான எண் 421 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி காரையார் சின்னமயிலார் பகுதி காணிக்குடியிருப்பிற்கு செல்ல தாமிரபரணி ஆற்றங்கரை குறுக்கே புதியதாக இரும்பு பாலம் அமைக்கம் பணி மேற்கொள்ள இடத்தினை ஆய்வு செய்து தனியார் ஆலோசகர் நிறுவனம் மூலம் முறையான வடிவமைப்பு திட்டக்கருத்துரு தயார் செய்ய வேண்டி வரப்பெற்ற மூன் று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | வேலையின் விவரம் | Ayothy Consultancy Sivagiri | Sama Construction & Developments, Chennai | Duken Engineers Sivakasi |
|---|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி காரையார் சின்ன மயிலார் பகுதியில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே புதியதாக பாலம் (Steel Bridge)அமைக்கும் பணி | Rs. 90000/- (including GST) | Rs. 1,12,500/- (including GST) | Rs. 1,35,000/- (including GST) |

**அலுவலகக்குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Ayothy Consultancy நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் 422 / மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி, ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் 6 மாதக் காலத்திற்கு பணி மேற்கொள்ள, நகர்மன்ற தீர்மான எண் 342 நாள் 29.09.2023 ன் படி, ஏப்ரல் 2024 வரை பணி மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெறப்பட்ட அனுமதி காலம் ஏப்ரல் 2024 உடன் முடிவடைவடைவதாலும், தற்போது 16.03.2024 முதல் பாராளுமன்ற தேர்தல் 2024க்கான தேர்தல் நடத்தை விதிகள் அமுல்படுத்தியுள்ள நிலையில், மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி தேர்தல் நடத்தை விதிகள் முடிவுற்று புதியதாக ஒப்பந்தப்புள்ள கோரும் வரை., இப்பணியினை மேலும் 3 மாத காலங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டுள்ள SKSS Poly Mak PvtLtd நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதியும், பாராளுமன்ற தேர்தல் 2024க்கானநடத்தை விதிகள் அமுலில் உள்ள நிலையில், ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது என்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை , ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தில், அனுமதிக்கப்பட்ட SKSS Poly Mak PvtLtd நிறுவனத்தின் பணிகாலத்தினை மேலும் 3 மாதக்காலங்களுக்கு கால நீட்டிப்பு செய்து வழங்கியதையும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 423 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.5**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொறியியற் பிரிவுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பணி மேற்கொள்ள வேண்டி, ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் 6 மாதக் காலத்திற்கு பணி மேற்கொள்ள, நகர்மன்ற தீர்மான எண் 344 நாள் 29.09.2023 ன் படி, ஏப்ரல் 2024 வரை பணி மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெறப்பட்ட அனுமதி காலம் ஏப்ரல் 2024 உடன் முடிவடைவடைவதாலும், தற்போது 16.03.2024 முதல் பாராளுமன்ற தேர்தல் 2024க்கான தேர்தல் நடத்தை விதிகள் அமுல்படுத்தியுள்ள நிலையில், மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி தேர்தல் நடத்தை விதிகள் முடிவுற்று புதியதாக ஒப்பந்தப்புள்ள கோரும் வரை., இப்பணியினை மேலும் 3 மாத காலங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டுள்ள SKSS Poly Mak PvtLtd நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதியும், பாராளுமன்ற தேர்தல் 2024க்கானநடத்தை விதிகள் அமுலில் உள்ள நிலையில், ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது என்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும்

வரை , ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தில், அனுமதிக்கப்பட்ட SKSS Poly Mak PvtLtd நிறுவனத்தின் பணிகாலத்தினை மேலும் 3 மாதக்காலங்களுக்கு கால நீட்டிப்பு செய்து வழங்கியதையும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 424 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 6**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி, ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் 6 மாதக் காலத்திற்கு பணி மேற்கொள்ள, நகர்மன்ற தீர்மான எண் 343 நாள் 29.09.2023 ன் படி, ஏப்ரல் 2024 வரை பணி மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெறப்பட்ட அனுமதி காலம் ஏப்ரல் 2024 உடன் முடிவடைவடைவதாலும், தற்போது 16.03.2024 முதல் பாராளுமன்ற தேர்தல் 2024க்கான தேர்தல் நடத்தை விதிகள் அமுல்படுத்தியுள்ள நிலையில், மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி தேர்தல் நடத்தை விதிகள் முடிவுற்று புதியதாக ஒப்பந்தப்புள்ள கோரும் வரை., இப்பணியினை மேலும் 3 மாத காலங்களுக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்பட்டுள்ள SKSS Poly Mak PvtLtd நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதியும், பாராளுமன்ற தேர்தல் 2024க்கானநடத்தை விதிகள் அமுலில் உள்ள நிலையில், ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது என்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை , ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தில், அனுமதிக்கப்பட்ட SKSS Poly Mak PvtLtd நிறுவனத்தின் பணிகாலத்தினை மேலும் 3 மாதக்காலங்களுக்கு கால நீட்டிப்பு செய்து வழங்கியதையும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 425 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 7**

சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண் 32658/ஆர்1/2023 நாள் 27.12.2023 மற்றும் திருநெல்வேலி நகராட்சிகள் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடிதம் ந.,க.எண் 5356/2023/அ2 நாள் 31.03.2024 கடிதங்களிவ் சொத்து வரியுடன் கல்விவரிவிதிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆரம்ப கல்விச்சட்டம் 1920 பிரிவு 34 ல் அரசின் முன் அனுமதியுடன் நகர்மன்றங்கள் சொத்து வரியுடன் கல்விவரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் விகிதத்தினை பிரிவு 35(1) ல் சொத்துக்களின் ஆண்டு மிதிப்பில் 5 விழுக்காட்டிற்குள் மிகாமல் வரிவிதிப்பு செய்ய வரையறை செய்யப்பட்டுள்ளது.மேலும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998(திருத்தம்) 2022 அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளில் 13.04.2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதில் பிரிவு 80 ல் நகர்மன்றங்கள் கல்விவரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பிரவு 91 ல் சொத்து வரி ஆண்டு மதிப்பில் 5 விழுக்காட்டிற்குள் மிகாமல் விதிப்பு செய்யவரையறை செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் கல்விவரிவிதிப்பு செய்யாத நகராட்சிகளுக்கு உரிய சட்டப்பிரிவுகள் மற்றும் வழிமுறைகளை பின்பற்றி அரசின் ஆணை பெற செயற்குறிப்பு அனுப்பவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் கல்விவரிவிதிப்பு செய்யப்படாததால் மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் அடிப்படையில் சொத்து வரி ஆண்டு மதிப்பில் 5 விழுக்காட்டிற்கும் மிகாமல் கல்விவரிவிதிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மன்றப்பொருளில் கண்டுள்ள சட்டப்பிரிவுகளின் அடிப்படையில் சொத்து வரி ஆண்டு மதிப்பில் 5 விழுக்காட்டிற்கும் மிகாமல் கல்விவரிவிதிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.,

**தீர்மான எண் 426 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 8**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் மின்னஞ்சல் செய்தி ந.க.எண் 2636/2023/இ5 நாள் 11.03.2024 ன் படி கோடை வெப்பதை தவிர்க்க பொது மக்கள் அதிகம் கூடும் முக்கிய இடங்களில் தண்ணீர் பந்தல் அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பாபநாசம் கோவில், டாணா பேரூந்து நிறுத்தம், சந்தனமாரியம்மன் கோவில் பேரூந்து நிறுத்தம், மூன்று விளக்கு பேரூந்து நிறுத்தம், தாய்சீனிஸ் திரையரங்கம் அருகில் மற்றும் அமலி மகளிர் பள்ளி அருகேயுள்ள பேரூந்து நிறுத்தம் ஆகிய 6 இடங்களில் இந்நகராட்சி மூலம் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று தண்ணீர் பந்தல் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு, மேலும் பணி மேற்கொண்டதற்கும் ,செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | வேலையின் விவரம் | ரமேஷ் ஒப்பந்தக்காரர் | வெங்கட்பெருமாள் சுப்பையா | கே.இராஜா, ஒப்பந்தக்காரர் |
|---|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் தண்ணீர் பந்தல் அமைத்து தினமும் தண்ணீர் நிரப்ப கூலி உட்பட நாள் ஒன்றுக்கு | %.505/- | %.495/- | %.475/- |

**அலுவலகக்குறிப்பு**

பணியின்அவசியம் மற்றும் அவசரம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம், குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. கே.இராஜா ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளியை அனுமதிக்கவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 427 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 9**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 21 வார்டு பகுதிகளில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான கைபம்புகள் (அடிபம்புகள்) மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட அடிபம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பொது மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக 2024-25 ம் ஆண்டுக்கு பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும்,பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

குடிநீர் அத்தியாவசியம் மற்றும் அவசியம் கருதி, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.00/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதி யில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் 428 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண்.10</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளுக்கும் இந்நகராட்சி மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீராக செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகத்திற்காக இந்நகராட்சி மூலம் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு, அதனை பராமரிப்பும் செய்து வருகிறது. மேற்கண்ட பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள், கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு 2024-25 ம் ஆண்டுக்கு பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணிமேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவினம் செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக, பகிர்மான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்,

**தீர்மான எண் 429 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 11</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளுக்கும் இந்நகராட்சி மூலம் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் சீராக செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகத்திற்காக இந்நகராட்சி மூலம் குடிநீர் பம்பிங் மெயின் குழாய்கள் பதிக்கப்பட்டு, அதனை பராமரிப்பும் செய்து வருகிறது. மேற்கண்ட பம்பிங் மெயின் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள், கசிவுகள் மற்றும் உடைப்புகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு 2024-25 ம் ஆண்டுக்கு பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணிமேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்டநிதி 2024-25 இருந்து செலவினம் செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக, பம்பிங் மெயின் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை **ரூ. 5.00/-** இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் 430/ மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 12</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோக மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகளில் இருந்து நாள் தோறும் குடிநீர் விநியோகம் செய்திட போதிய குடிநீர் விநியோக பணியாளர்கள் இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்படாத நிலையில், ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் (Outsourcing) 6 மாதகாலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒப்பந்தக்காலம் ஏப்ரல் 2024 உடன் முடிவடைந்துவிட்ட நிலையில், மேலும் 3 மாத காலங்களுக்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டு தற்போது பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.. மேலும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்வதில் எவ்வித தடையும் ஏற்படா வண்ணம் பணி மேற்கொள்ள வேண்டி ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் **6** மாத காலத்திற்கு பணியமர்த்திட வேண்டி, தயார் செய்யப்பட்டுள்ள

மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.00/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும் , ஓப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u>

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொறியியற் பிரிவில் போதிய திறனற்ற பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்படாத நிலையில் இப்பணியாளர்களை ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலத்திற்கு பணியமர்த்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.00/- இலட்சத்திற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் 431 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 13</u>

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளின் தரத்தினை ஆய்வு செய்து, தரத்தினை உறுதி செய்யவும் தொழில்நுட்ப உதவியாளர் ஒரு எண்ணம் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது. மேற்கண்ட பணியாளரை , ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் (Outsourcing) 6 மாதகாலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒப்பந்தக்காலம் ஏப்ரல் 2024 உடன் முடிவடைந்துவிட்ட நிலையில், மேலும் 3 மாத காலங்களுக்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டு தற்போது பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் 11 மாத காலத்திற்கு பணியமர்த்திட வேண்டி, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.2.90/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும் , ஓப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u>

பணியின் அவசியம் கருதி ஆட்கொணர்வு வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் 11 மாத காலத்திற்கு பணியமர்த்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.90/- இலட்சத்திற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் 432 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 14</u>

அரசாணை (MS ) எண்.159, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.08/11/2022-இன்படியும் மற்றும் அரசாணை (4டி) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.12.2022-இன்படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் அம்ரூத் 2.0 2022-23ம் ஆண்டின் கீழ் ரூ.2951.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வரப்பெற்று 10.02.2023ம் தேதி முதல் குடிநீர் அபிவிருத்தி பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி திட்டத்தில் மத்திய அரசு மான்யம் தொகை ரூ.14.76 கோடி, மாநில அரசு மான்யம் தொகை ரூ.8.85 கோடி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்ட நிதி ரூ.2.95 கோடி மற்றும் மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (SUIDF) திட்ட கடன் நிதி தொகை ரூ.2.95 கோடி என அரசாணை வரப்பெற்றுள்ளது. மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (SUIDF) நிதியில் அனுமதிக்கப்பட்ட திட்ட நிதி தொகை ரூ.295.00 இலட்சத்தினை, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி கழகத்திடம் (TUFIDCO) கடனாக பெற்று பணிகள் நடைபெற ஒப்பந்தம் மேற்கொள்ளவும், நகராட்சியில் தனியாக ESCROW வங்கிக் கணக்கு துவக்கம் செய்து கடன் தொகையினை நிபந்தனைகளுடன் திருப்பி செலுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. Resolved that the Vickramasingapuram Municipality is authorised to borrow a loan amount of **Rs.2.95 Crore** for " Improvement of Water Supply distribution system to Vickramasingapuram Municipality as ULB Share (AMRUT 2.0 scheme)" from Tamil Nadu Urban Finance Infrastructure Development Corporation Ltd (TUFIDCO), under State Urban Infrastructure Development Fund (SUIDF), as per the terms and conditions prescribed by TUFIDCO and G.O.(Ms)No.170, MA&WS (MA2) Dept.,Dt:07-12-2022 and G.O.(4D) No.23, MA&WS (SS&FC) Dept.01-12-2022.
2. Resolved that the Vickramasingapuram Municipality is hereby authorised to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of the Vickramasingapuram Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of the Vickramasingapuram Municipality.
3. Resolved that the Vickramasingapuram Municipality bank account on the revenue collection such as property tax, professional tax and other revenue collections shall be escrowed / to the extent of quarterly / monthly repayment commitment in favour of TUFIDCO. This exclusive escrowed account will be in existence till the time of clearing the loan and all other dues under this project to TUFIDCO.
4. Resolved that the Commissioner be and hereby authorized to make necessary budgetary provisions in the annual budget of the Vickramasingapuram Municipality for the repayment of principal, interest and other monies due for the loan availed for this project proposal to TUFIDCO.
5. Resolved to agree, to adjust by the Government of Tamil Nadu from funds receivable for Vickramasingapuram Municipality such as Devolution grant payment under State Finance Commission recommendation, other grants, share on tax and stamp duties due from the Government, in the event of default in repayment of principal, interest and other monies due to TUFIDCO in respect of loans availed for this project.p
6. The Vickramasingapuram Municipality Shall Submit an undertaking stating that if for any reason,the projected increase in property tax, professional tax etc., could not be implemented, the short fall if any arising in any period shall not affect the timely repayment of its dues to TUFIDCO and in such case the Government may be permitted to deduct the said dues out of the SFC funds on the first priority basis

**தீர்மான எண் 433 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 15**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி கட்டபொம்மன் காலனி பகுதியில் அமைந்துள்ள பிளாஸ்டிக் சேகரிக்கும் மையத்தில் கடந்த 15.04.2024 அன்று மாலை நேரத்தில் எதிர்பாரத விதமாக தீ விபத்து ஏற்பட்டது. காற்று பலமாக வீசியதால் தீயினை உடனடியாக அனைக்க இயலத நிலை ஏற்பட்டு, பின்னர் மூன்று தீயணைப்பு வண்டி மற்றும் இரண்டு JCB இயந்திரம் மற்றும் மூன்று டிரக்டர் பயன்படுத்தப்பட்டு மேற்கண்ட தீயினை 24 மணி நேரமாக போராடி அனைக்கப்பட்டது. மேற்படி பணியினை மேற்கொண்டதற்கு டிரக்டர் வாடகை, JCB இயந்திர வாடகை மற்றும் தீயணைப்பு துறை பணியாளர்கள், நகராட்சி துப்பரவு பணியாளர்களுக்காக இரவு உணவு போன்ற செலவினங்கள் பணியின் அவசரத்தினை கருதி உடனடியாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. செலவினத் தொகை ரூ. 67500/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

எதிர்பாரத விதமாக ஏற்பட்ட தீ விபத்தினை பாதுகாப்பு கருதி , உடனடியாக அணைக்க மேற்கொள்ளப்பட்ட பணிகளை மன்றம் அனுமதிக்கலாம், மேலும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் 434 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 16**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள கசடு கழிவு சுத்திகரிப்பு நிலயித்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள 03.05.2021 அன்று ஒப்பந்த அடிப்படையில் திருமதி.சுதந்திரசெல்வி என்பவருக்கு மூன்றாண்டு காலம் பணியினை மேற்கொள்ள இவ்வலுவலக ந.க.எண் 1965/2015/இ1 நாள் 03.05.2021ன் படி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒப்பந்தக்காரர் மூலம் நாளது தேதி வரை பணி

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த பணி காலம் 31.05.2024 உடன் முடிவடைந்து விட்டது. பாராளுமன்ற தேர்தல் 2024 க்கான நடத்தை விதிகள் அமுலில் இருந்த நிலையில், ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலையிலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்த , திருமதி.சுதந்திரசெல்வி.என்பவர் மூலமே ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளப்பட்டதற்கும், மு மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தினை கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 435 / பணியின் அவசியம் கருதி மன்றத்தால் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 17**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஈப்பு வாகனம் எண் TN 76AW 3579 பொது பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி ஈப்பு ஓட்டுநர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.அதன் படி மேற்கண்ட வாகனத்தின் பழுதுகளை நீக்கி பொது பராமரிப்பு பணி மேற்கொள்ள 12.03.204 அன்று பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளியின் அடிப்படையில் பேணி மேற்கொண்டதற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

| thfd v© | M/S, Nambi Motor works. Tirunelveli | Prabha Motors Works, Ambasamudram | RVR Motor Works, Ambasamudram |
|---|---|---|---|
| TN 76 AW 3579 பொது பராமரிப்பு பணிமேற்கொள்ள | Rs.53950/- Including labour charges | Rs.51440/- Including labour charges | Rs.49075/- Including labour charges |

**அலுவலகக்குறிப்பு**

மேற்படி வாகன எண் TN 76AW 3579 இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் பயன்பாட்டிற்கு உள்ளதால் வாகனத்தின் அவசியத்தினை கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று, குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள **RVR Motor Works, Ambasamudram** நிறுவனத்தின் விலைப்புள்ளியை அனுமதித்து பணி மேற்கொண்டதற்கும், அதற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 436 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 18**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொறியாளர் பயன்பாட்டிற்கு உள்ள ஈப்பு வாகனம் எண் TN 76 T 9612 பொது பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி ஈப்பு ஓட்டுநர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.அதன் படி மேற்கண்ட வாகனத்தின் பழுதுகளை நீக்கி பொது பராமரிப்பு பணி மேற்கொள்ள பொறியாளர் அவர்களின் குறிப்பில் அங்கீகரிக்கப்பட்ட மகேந்திர டீலர் நிறுவனத்தில் பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.,1.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும் செலவினத் தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அவசியம் கருதியும், பொறியாளர் அவர்களின் குறிப்புரையின் படியும், அங்கீகரிக்கப்பட்ட மகேந்திர டீலர் நிறுவனத்தில் பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 437 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 19**

விக்கிரமசிங்கபுரம்நகராட்சி பகுதியில் அமையப்பெற்றுள்ள நகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடம், வணிக வளாக கட்டிடங்கள், கழிப்பறை மற்றும் இதர கட்டிடங்களில் உள்ள மின்விளக்குகள் மற்றும் இதர மின் சாதன பொருட்கள் பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி, நகராட்சி பணி

மேற்பார்வையாளர் அவர்களால் கணக்கிடப்பட்ட உத்தேச செலவினத் தொகை ரூ. 10000/- க்கு மன்ற அனுமதி வேண்டியும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u>

நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் உள்ள மின் சாதன பொருட்கள் மற்றும் மின் விளக்குகள் பரமரிப்பு பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 438 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 20</u>

விக்கிரமசிங்கபுரம்நகராட்சி பகுதியில் அமையப்பெற்றுள்ள 11 எண்ணம் உயர்கோபுர மின் விளக்குள் , அனைத்தும், பழுதடைந்துள்ள நிலையில், அதனை உடனடியாக பழுதுநீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளவேண்டியது அவசியமாகிறது. மேற்கண்ட பழுது நீக்க பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5,00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், பணி மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொது மக்கள் நலன் கருதி உயர் கோபுர மின் விளக்குள் பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5,00 இலட்சத்திற்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.,

**தீர்மான எண் 439 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 21</u>

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட அட்டவணையில் கண்ட இனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் அனுபவ உரிமத்திற்கும் 01.04.2024 ம் ஆண்டு முதல் 31.03.2027 ம் ஆண்டு முடிய மூன்றாண்டு அனுபவ உரிமத்திற்கு பொது நிபந்தனை மற்றும் சிறப்பு நிபந்தனைக்குட்பட்டும் நகர்மன்ற தீர்மானம் எண்:371 நாள்:30.11.2023 பொது ஏலம் விட ஒப்புதல் வழங்கியுள்ளதினை தொடர்ந்து 15.03.2024 ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.30 வரை அதற்கான ஒப்பந்தபுள்ளிகள் வரவேற்கப்படுகிறது. அன்றைய தினம் மதியம் 12.00 மணிக்கு ஆணையாளர் அல்லது ஆணையரின் அங்கீகாரம் பெற்ற அலுவரால் பொது ஏலம் நடத்தப்படும்.மேலும் ஒப்பந்தபுள்ளி கொடுக்க முன்வருபவர்களும் ஏலத்தில் கலந்து கொள்ள முன்வருபவர்களும் குத்தகை உரிம இனங்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள வைப்புத்தொகையை ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நடைபெறும் தினத்திற்கு முந்தையதினம் 14.03.2024 வியாழன்கிழமை 3.30 மணிக்குள் நகராட்சி ஆணையாளர் பெயரில் வரைவோலையாக இனம்வாரியாக அட்டவணையில் பட்டியல் இனத்திற்கு எதிரே கண்ட தொகையுடன் செல்நிலை சான்று கொடுக்கப்பட வேண்டும். முதல் மற்றும் இரண்டாவது ஏலக்கேள்விதாரர்கள் ஏல வைப்புத்தொகை ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகைகள் மற்றும் அதற்காக கொடுக்கப்பட்ட செல்நிலை சான்றுகள் மன்றம் ஒப்புதல் வழங்கப்ட்ட பின்னரே பரிசீலனை செய்யப்படும். மேலும் ஏலத்தினை எவ்வித காரணமின்றி ரத்து செய்யவோ, அல்லது ஒத்தி வைக்கவோ ஆணையருக்கு அதிகாரம் உள்ளது. கூடுதல் விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை அலுவலக நாட்களில் அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

அட்டவணை

| வ. எண் | குத்தகை இனம் விவரம் | ஏலப்பொறுப்பு தொகை ரூ. | சொத்து மதிப்பு சான்று ரூ. | கூடுதல் ஏலம் பொறுப்பு தொகை,ரூ | மின் இணைப்பு பொறுப்பு தொகை.ரூ |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கீழரதவீதி கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 50000 | 200000 | 50000 | 5000 |
| 2 | சந்தனமாரியம்மன் கோவில் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 50000 | 200000 | 50000 | 5000 |
| 3 | காவல்நிலையம் அருகில் அருகில் உள்ள கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 50000 | 200000 | 50000 | 5000 |

மேற்கண்ட குத்தகை பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்தமைக்கான கட்டணம் தொகை ரூ.13759/- னை தினகரன் நாளிதழ் (KAL PUBLICATIONS (P) LTD) நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு</u>

ஏல நடவடிக்கை மேற்கொண்டதற்கும், ஏல அறிவிப்பினை நாளிதழில் விளம்பரம் செய்யபபட்டதற்கும் , செலவினத் தொகை ரூ.13759/- மட்டும் இந்நகராட்சி பொத நிதியில் இருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 440 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 22</u>

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் இரவுக்காவலராக பணிபுரிந்த திரு.தி.சங்கிலிமுத்து என்பவரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் WA(MD)NO.952/2016 வழக்கின் தீர்ப்பு வரப்பெற்றமைக்கும், அதற்கான வழக்கு கட்டணமாக ரூ 11,000/- ம் வழங்கிட கோரி வழக்கறிஞர் திரு.H.ஆறுமுகம் என்பவரிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட வழக்கறிஞர் கட்டணம் ரூ.11,000/-ஐ திரு.எச்.ஆறுமுகம் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 441 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 23</u>

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக வளாகத்தின் முன் புறம் மேற்கூரை ஏதும் இல்லா நிலையில், அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம், நகர்மன்றத் தலைவர் அவர்களின் புதிய ஈப்பு வாகனம், பணியாளர்களின் வாகனங்கள் அனைத்தும் மற்றும் நகராட்சிக்கு வரும் பொதுமக்களும் , வெயில் மற்றும் மழைகாலங்களில் வெட்வெளியில் வெயிலிலும் மழையிலும் நிறுத்தப்பட்டு வாகனங்கள் சிதிலமடைவதோடு, பொது மக்களும் மிகவும் சிரமப்படுகின்றனர், எனவே பொது மக்கள் மற்றும் அலுவலக வாகனங்கள் மற்றும் பணியாளர்களின் நலன் கருதி, இந்நகராட்சி அலுவலக முன் புறம் புதியதாக மேற்கூரை அமைக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொதுமக்களின் நலன் கருதியும், அலுவலக வாகனங்கள் மற்றும் பணியாளர்களின் வாகனங்களின் பாதுகாப்பு கருதியும் , அலுவலக வளாகத்தின் முன் புறம் மேற்கூரை அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 7.00 இலட்சத்திற்கும், பணி மேற்கொள்ளவும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்,

**தீர்மான எண் 442 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 24</u>

திருநெல்வேலி மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் தலைமையில் 14.05.2024 அன்ற நடைபெற்ற காணொளி ஆய்வு கூட்டத்தில், தமிழக முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பெற்ற மீண்டும்

மஞ்சப்பை திட்டத்தினை நகராட்சி மூலம் பொது மக்களிடயே விழிப்புணர்வு ஏற்படுத்த வலியுறுத்தப்பட்டது. அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியிலுள்ள கடைகள் மற்றும் பொது மக்களிடயே விழிப்புணர்வு ஏற்படுத்த 8000 எண்ணம் மஞ்சப்பை தயார் செய்து வழங்கவும் அதற்குரிய செலவினத்தை தூய்மை இந்தியா திட்டம் (SBM) IEC திட்டத்திலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

அரசின் சிறப்பு திட்டம் என்பதாலும்,நெகிழி பொருட்கள் பயன்பாட்டை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்கள் மற்றும் கடைகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மஞ்சப்பை வழங்கவும் அதற்கான செலவினத்தை தூய்மை இந்தியா திட்டம் (SBM) IEC திட்டத்திலிருந்து செலவு மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 443 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 25**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, சேரன்மகாதேவி சார் அட்சியர் அவர்களால் 06.06.2024 அன்று தாமிரபரணி நதி பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் தாமிரபரணி நதி பாதுகாப்பு குறித்து பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து சார் ஆட்சியர் அவர்களால் விரிவாக கலந்து ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்ட அறிவுரைகளின் படி, மாதம் தோறும் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெறவேண்டும் எனவும், தாமிரபரணி ஆற்றில் துணிகள் விட்டுச்செல்வோர்க்கும், போடும் நபர்களுக்கும் ரூ. 500 அபராதம் விதிக்க நகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி மேற்கண்ட அபராதம் விதிக்கவும். மேற்கண்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடத்தப்படுவதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்துமேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அவர்களின் அறிவுரையின் படியும்,தாமிரபரணி நதியின் பாதுகாப்பு கருதியும், ஆற்றில் துணியை போடும் நபர்களுக்கு ரூ. 500/- வீதம் அபராதம் விதிக்கவும், பிரிதி மாதம் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடத்தப்படுவதற்கான செலவினத்தையும் இந்நகரட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 444 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 26**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள சிறுமின்விசை பம்புகளில் உள்ள சின்டெக்ஸ் தொட்டி பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி 19.07.2024 அன்று வரப்பெற்ற இரண்டு ஓப்பந்தப்புள்ளிகளின் ஓப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஓப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதிகளில் உள்ள சிறுமின் விசை பம்புகளின் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி பராமரிப்பு பணி (மதிப்பீடு ரூ.5.00 இலட்சம்) ந.க.எண் 426/ 2024 /இ 1 | திரு. கே.ராஜா ஓப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.19% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி ஓப்பந்தக்காரர் திருநெல்வேலி | 35.46% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு

வரபெற்ற இரண்டு ஓப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஓப்பந்தக்காரர் திரு. கே.ராஜா ஓப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஓப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்கக மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் 445 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 27**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள தலையணை நீரேற்று நிலையம் மற்றும் வம்பளந்தான் பாறை நீரேற்று நிலையங்களில் பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி 19.07.2024 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி தலையணை நீரேற்று நிலையம் மற்றும் வம்பளந்தான் பாறை நீரேற்று நிலையத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் (மதிப்பீடு ரூ.5.00 இலட்சம்) ந.க.எண் 426/ 2024 /இ 1 | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.25% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 1.00% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்கக மன்றம் அனுமதி க்லாம்

## தீர்மான எண் 446 / மன்றம் அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண். 28**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு எண் 11 எரிகல்பாறை சிறுமின் விசை தொட்டி மற்றும் வார்டு எண் 10 ஆம்பூர் மெயின்ரோடு பகுதி சிறுமின் விசை தொட்டி பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி 19.07.2024 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி எரிகல் பாறை பகுதி சிறுமின் விசை தொட்டிக்கு புதியதாக ஆழ்துளாய் கிணறு அமைத்தல் மற்றும் ஆம்பூர் மெயின்ரோடு பகுதி சிறுமின் சிசை பம்பு கட்டிடம் பராமரித்தல் பணி மேற்கொள்ளுதல் (மதிப்பீடு ரூ.2.75 இலட்சம்) ந.க.எண் 426/ 2024 /இ 1 | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.20% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 1.00% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்கக மன்றம் அனுமதி க்லாம்

## தீர்மான எண் 447 / மன்றம் அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண். 29**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த சமையற் கூடம் பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி 19.07.2024 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அய்யனார்குளம் பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடத்தில் | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் | 0.10% மதிப்பீட்டைவிட |

| | | | |
|---|---|---|---|
| | பாதுகாப்பு கருதி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் (மதிப்பீடு ரூ. 0.25 இலட்சம்) ந.க.எண் 426/ 2024 /Ï 1 | விக்கிரமசிங்கபுரம் | குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 1.00% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்கக மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் 448 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 30</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள விலங்குகள்கட்டுப்பாட்டு மையத்தில் கூடுதல் அடிப்படைவசதிகள் பணி மேற்கொள்ள வேண்டி 19.07.2024 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் உள்ள விலங்குகள் கட்டுபாட்டு மையத்தில் (ஹகூஷஊ) கூடுதல் அடிப்படைவசதிகள் மேற்கொள்ளுதல் (மதிப்பீடு ரூ. 5.00 இலட்சம்) ந.க.எண் 426/ 2024 /இ 1 | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.10% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 1.00% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்கக மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் 449 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 31</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி நீரேற்று நிலையங்களில் உள்ள ஜென்ரேட்டர்கள் பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி 19.07.2024 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி குடிநீர் நீரேற்று நிலையங்களில் உள்ள ஜென்ரேட்டர் பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் (மதிப்பீடு ரூ. 3.50 இலட்சம்) ந.க.எண் 426/ 2024 /இ 1 | ASM Electricals விக்கிரமசிங்கபுரம் | 0.00% மதிப்பீட்டு விலை விகிதம் |
| | | Digitech சங்கரன்கோவில் மெயின் ரோடு , ராமையன்பட்டி | 1.11% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் ASM Electricals , விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்கக மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் 450 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 32</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணிகள் மற்றம் பிரிண்டர்கைள் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி 19.07.2024 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகள், பிரிண்டர்கள் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் (மதிப்பீடு ரூ. 1.35 இலட்சம்) ந.க.எண் 426/ 2024 /ï 1 | ASM Electricals விக்கிரமசிங்கபுரம் | 0.09% மதிப்பீட்டு விலை விகிதம் |
| | | Digitech சங்கரன்கோவில் மெயின் ரோடு , ராமையன்பட்டி | 4.03% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் Digitech , சங்கரன்கோவில் மெயின் ரோடு , ராமையன்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்கக மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் 451 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 33</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி உயர்கோபுர மின் விளக்குகள் பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி 19.07.2024 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி பாபநாசம் கோவில் அருகில், சந்தனமாரியம்மன் கோவில் மற்றும் மூன்று விளக்கு பேருந்து நிலைய அருகில் உள்ள உயர் கோபுர மின் விளக்குள் பராமரித்தல் பணி **(மதிப்பீடு ரூ. 2.42 இலட்சம்)** ந.க.எண் **426/ 2024 /இ 1** | ஷாஜெகன்லால் ஜெயந்தி லால் ஜெயின் திருநெல்வேலி | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | மாலிணி லைட்டிங் கம்பெனி திருநெல்வேலி | 0.40% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் ஷாஜெகன்லால் ஜெயந்தி லால் ஜெயின் திருநெல்வேலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்கக மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் 452 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 34</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளிலும் , பொது மக்கள் பயன்பாட்டிற்காக இந்நகராட்சி மூலம் 114 எண்ணம் சிறுமின் விசை பம்புகள் (Sintex) வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட சிறுமின் விசை பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்து பொது மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய ஏதுவாக 2024-25 ம் ஆண்டுக்கு பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும்,பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரவும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

குடிநீர் அத்தியாவசியம் மற்றும் அவசியம் கருதி, தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00/- இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மேலும் பணிகள் மேற்கொள்ளவும், , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதி யில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் 453 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 35**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதிகையடி தூய நீரேற்று நிலையத்தின் மூலம் இந்நகர் பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு கருதி, விநியோகம் செய்யப்படும் குடிநீரில், திரவகோளரின் கலக்க வேண்டி தேவையான திரவகுளோரின் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. திரவகுளோரின் விலை தமிழ்நாடு பொதுபணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரிய விலைவிவரப்பட்டியலில் வகை செய்யப்படாத நிலையில் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு கருதி, திரவக்குளோரின் கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கும்,செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 454 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 36**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி ஓட்டன்குளம் மற்றும் வம்பளந்தான்பாறை நீரேற்று நிலையம் மூலம் இந்நகர் பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு கருதி, விநியோகம் செய்யப்படும் குடிநீரில், திரவகோளரின் கலக்க வேண்டி தேவையான திரவகுளோரின் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. திரவகுளோரின் விலை தமிழ்நாடு பொதுபணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரிய விலைவிவரப்பட்டியலில் வகை செய்யப்படாத நிலையில் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு கருதி, திரவக்குளோரின் கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கும்,செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 455 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 37**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி வார்டு எண் 8 பசுக்கிடைவிளை காதராஜர் நகர் பகுதியில் அமைந்துள்ள நியாய விலைக்கடை முன்பு மழைநீர் வடிகால் இல்லாமல் நியாய விலைக்கடைக்கு வரும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் நியாய விலைக் கடையின் கட்டிடமும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் கோரிக்கை மனு அளித்துள்ளார். அதன் படி மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கவும், நியாய விலைக்கடை கட்டிட பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு**

நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் படியும், மேற்கண்ட பகுதி பொது மக்களின் நலன் கருதியும், மேற்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 3.50 இலட்சத்திற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 456 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 38**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி காரையார் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு சொரிமுத்து அய்யனார் கோவில் திருவிழா எதிர் வரும் 04.08.2024 அன்று நடைபெற இருப்பதால், திருவிழாவிற்கும் வரும் பக்தர்கள் மற்றும் பொது மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளானகுடிநீர் மற்றும் தற்காலிக கழிப்பிடம் அமைத்து தர வேண்டியுள்ளது. மேற்கண்ட செலவினத்திற்கான விலைப்பட்டியல் தமிழ்நாடு பொதுபணித்துறை விலைவிவரப்பட்டியலில் வகை செய்யப்படாத நிலையில் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச செலவினத் தொகை ரூ. 1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

அருள்மிகு சொரிமுத்து அய்யனார் கோவில் திருவிழாவிற்கு வருகை தரும் பொது மக்கள் மற்றும் பக்தர்களின் நலன் கருதி மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளவும், உத்தேச செலவினத் தொகை ரூ. 1.50 இவட்சத்திற்கும் மற்றும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி வழங்கலாம்,.

**தீர்மான எண் 457 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 39**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி காரையார் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு சொரிமுத்து அய்யனார் கோவில் திருவிழா எதிர் வரும் 04.08.2024 அன்று நடைபெறவுள்ளது. மேற்கண்ட திருவிழா 3 நாட்கள் வெகுசிறப்பாக நடைபெறும். மேற்கண்ட பகுதியில் பொது மக்களும், பக்தர்களும் தொடர்ந்து மூன்று நாட்கள் தங்கிஇருந்து திருவிழாவினை சிறப்பாக கொண்டாட படும். மேற்கண்ட பகுதியில் கூடும் பொது மக்கள் மற்றும் பொது மக்களுக்கான பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. மேலும் வெளி நகராட்சிகள் மற்றும் பஞ்சாய்துகளில் இருந்து சுகாதார பணியாளர்கள் வருகை புரிந்து பொது சுகாதார பணி மேற்கொள்ளப்படவுள்ளதால், மேற்கண்ட காரையார் பகுதியில் பணியாளர்கள் தங்க கூடாரம், உணவு, குடிநீர் ஏற்பாடு செய்யவும் , பொது சுகாதார பணிகளுக்கான தளவாட பொருட்கள் மற்றும் கிருமி நாசினி பொருட்கள் கொள்முதல் செய்யவும், தேவையாக உத்தேச செலவினத் தொகை ரூ. 2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

அருள்மிகு சொரிமுத்து அய்யனார் கோவில் திருவிழாவிற்கு வருகை தரும் பொது மக்கள் மற்றும் பக்தர்களின் நலன் கருதி மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளவும், உத்தேச செலவினத் தொகை ரூ. 2.00 இவட்சத்திற்கும் மற்றும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி வழங்கலாம்,.

**தீர்மான எண் 458 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 40**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் இயங்னி வந்த 6 பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் ந7/35599/2022 நாள் 24.04.2023 க் படி , நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட பள்ளிகளுக்கான பராமரிப்பு பணிகளை நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அத ன் படி வார்டு எண் 2 அய்யனார்குளம் பகுதி மற்றும் வார்டு

எண் 10 அனவன் குடியிருப்பு பகுதி நகராட்சி பள்ளிகளில் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 9.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u>

நகராட்சி பள்ளி குழந்தைகளின் நலன் கருதி பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 459 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 41</u>

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் 2022-2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது கீழ்க்காணும் அறிவிப்பு செய்யப்பட்டது. "**சாலையோர வியாபாரிகளுக்கானத் திட்டம் (Street Vendors Welfare)** தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூகபாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் எவ்விதசிரமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்."

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1, நாள்.16.06.2022ல், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள்2015-ன் படி கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்று தயார் செய்து வழங்குதல் மற்றும் விற்பனைத் திட்டம் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக்கோரப்பட்டதைத் தொடர்ந்து, இந்நகராட்சி எல்லைக்குட் பட்ட பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு நடைபெற்றதில், மொத்தம் 364 நபர்கள் உள்ளனர் எனக்கண்டறியப்பட்டு, மேற்படி நபர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்றும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்..20789/2021/UPA, நாள்.07.06.2024 ல் தற்போது தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்புப்பணி முடிவுற்றதால், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் விதிகள் 2015, அத்தியாயம் IV-ன்படி, நகர விற்பனைக்குழு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் விற்பனையினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015, அத்தியாயம் IV-ன் படி, நகர விற்பனைக் குழு அமைக்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவில் தலைவருடன் சேர்த்து மொத்தம் 15 உறுப்பினர்கள் அடங்குவர்.

| | | |
|---|---|---|
| நகராட்சி ஆணையர் | -- | 1(தலைவர்) |
| மருத்துவ அலுவலர் | -- | 1 |
| காவல் அலுவலர்கள் (போக்குவரத்து காவல் அலுவலர் உள்பட) | -- | 2 |
| நகராட்சியின் ஏதேனும் ஒரு அலுவலர் | -- | 1 |
| தெருவோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் | -- | 6 |
| வணிகர் சங்கப் பிரதி நிதிகள் | -- | 1 |
| அரசு சாரா மற்றும் சமூதாய அமைப்பின் பிரதிநிதிகள் | -- | 2 |
| குடியிருப் போர் நலச் சங்க பிரதிநிதிகள் | -- | 1 |

மேற்கண்ட 15 உறுப்பினர்களில் 9 உறுப்பினர்களை (தெருவோர வியாபாரிகள் தவிர்த்து) சம்மந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நியமன்ம் செய்யப்பட வேண்டும் எனவும், மீதம்உள்ள 6 உறுப்பினர்களை மட்டும் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ள தெருவோர வியாபாரிகள் 364 நபர்களுக் கிடையே தேர்தல் நடத்தி தேர்தல்மூலம் 6 உறுப்பினர்களை தேர்வு செய்ய வேண்டும் எனவும், அவர்களை கீழ்க்காணும் விவரப்படி தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | ஆதிதிராவிடர் | -- | 1 |
| (2) | இதர பிற்படுத்தப்பட்டோர் | -- | 1 |
| (3) | மகளிர் | -- | 1 |
| (4) | மாற்றுத்திறனாளி | -- | 1 |
| (5) | சிறுபான்மையினர் | -- | 1 |
| (6) | பொது | -- | 1 |

மேலும், மேற்கண்ட தேர்தல் நடைபெறும்நாள், நேரம் மற்றும் இடம் குறித்து நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் எனமேற் கண்ட விதிகளில் விதி எண்.13(3)ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பின்பு தேர்தல் நடத்தி அதன்மூலம் 6 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.எனவே, நகர விற்பனைக்குழுவில் இடம் பெறவுள்ள 6 தெருவோர வியாபாரிகளை உறுப்பினர்களாக தேர்வு செய்வதற்கான தேர்தலை கீழ்க்காணும் படி நடத்த நகர் மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

**தேர்தல் நடைபெறும் இடம் :- நகராட்சி அலுவலகம், விக்கிரமசிங்கபுரம்**

| தேர்தல் விவரப்பட்டியல் | | நாள் | நேரம் |
|---|---|---|---|
| தேர்தல் அறிவிக்கை வெளியிடுதல் | -- | 31.07.2024 | |
| வேட்பு மனுக்கள் பெறுதல் | -- | 09.08.2024 | காலை 10 மணிமுதல்பிற்பகல் 3 மணிவரை |
| வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் | -- | 19.08.2024 | காலை 10 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை |
| வேட்பு மனுக்கள் பரிசீலணை | -- | 20.08.2024 | காலை 11 மணிமுதல் |
| வேட்பு மனுக்கள் வாபஸ் பெறுதல் | -- | 21,08.2024 | பிற்பகல் 3 மணிவரை |
| வாக்குப்பதிவு நடை பெறும்நாள் | -- | 28.08.2024 | காலை 10 மணிமுதல்மாலை 5 மணிவரை |
| வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் | -- | 28.08.2024 | மாலை 6 மணிக்கு நடைபெறும் |

**அலுவலககுறிப்பு**

1. மேற்குறிப்பிட்ட அட்டவணையின் படி தேர்தல் நடத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தேர்தல் தொடர்பாக ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற் கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் பிரசுரம்செய்ய ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3659/2020/எப்1)

**தீர்மான எண் 460 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 42**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண் 13 மருதம் நகர் (சிவஞானபுரம் எதிர் சந்து) பகுதியில் , மழைநீர் வடிகால் இல்லாமல் அப்பகுதியில் இருந்த வெளியேறும் கழிவு நீர் மற்றும் மழை நீர்கள் செல்ல வழியில்லாததால், அப்பகுதி பொது மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் மேற்கண்ட பகுதியில்

உள்ள பொது மக்கள் அப்பகுதியில் மழைநீர் வடிகால் வேண்டி, மக்களுடன் முதல்வர், முதல்வரின் முகவரி மற்றும் உங்கள் தொகுதியில் முதல்வர் ஆகிய திட்டங்களின் கீழ் புகார் அளித்துள்ளனர். மேற்கண்ட பகுதி நேராய்வு செய்யப்பட்டதில், அப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்து நீரே வெளியேற்ற இட வசதி இல்லை என்பதால், அப்பகுதியில் மழைநீர் வடிகால் இயந்திர குழி (Machine Hole) அமைத்து மின் விசைபம்பு மூலம் மழைநீரை வெளியேற்ற ஏதுவாக தனியார் தொழில்நுட்ப ஆலோசகர் மூலம் விரிவான திட்ட அறிக்கை, மதிப்பீடு மற்றும் வடிவமைப்பு பெற வேண்டி யாகும் செலவினத் தொகை ரூ. 40000/-க்கு அனுமதி வேண்டியும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு**

மேற்கண்ட பகுதி பொதுமக்களின் நலன் கருதி, மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஆகும் செலவினத்திற்கும், அச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 461 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 43**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி கட்டப்பொம்மன் காலனி பகுதியில், விலங்கு பிறப்பு கட்டுப்பாட்டு மையம் (ABC) அமைக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மையத்தில் விலங்குகள் பிறப்பு கட்பாடு செய்யும் பொருட்டு மேற்கண்ட கட்டுப்பாட்டு மைய வழிகாட்டு நெறிமுறைகளின் படி, தேவையான உபகரணங்கள் , கருவிகள் மற்றும் இதர பொருட்கள் கொள்முதல் செய்ய, திருநெல்வேலி மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களால் காணொளி காட்சி ஆய்வுக் கூட்டம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சி விலங்கு பிறப்பு கட்டுப்பாட்டு மையத்திற்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்ய வேண்டி உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ., 3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும் ,செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு**

பணியின் அவசியம் கருதியும், கட்டுப்பாட்டு மைய வழிகாட்டு நெறிமுறைகளின் படியும் விலங்கு பிறப்பு கட்டுப்பாட்டு மையத்திற்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்ய உத்தேச செலவினத் தொகை ரூ. 3.50 இலட்சத்திற்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 462 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 44**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் பொது சுகாதார பிரிவு மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் இந்நகர் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பறைகள், அலுவலக கழிப்பறைகள் மற்றும் நகரில் பொது மக்கள் கூடும் இடங்களில், இந்நகராட்சி மூலம் கிருமி நாசினிகளான பினாயில், பிளீச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்பு தூள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே பொது சுகாதாரத்திற்கு தேவையாக மேற்கண்ட பொருட்கள் கொள்முதல் செய்ய வேண்டி உத்தேச செலவினத் தெகை ரூ. 10.00 இலட்சத்திற்கு நகர் மன்ற அனுமதி வேண்டியும்,செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு**

திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் பொது சுகாதரம் பணிகளின் அவசியம் கருதி மேற்கண்ட கிருமி நாசினி பொருட்கள் கொள்முதல் செய்யவும், உத்தேச செலவினத் தொகை ரூ. 10.00 இலட்சத்திற்கும், செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 463 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 45</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் பொது சுகாதார பிரிவு மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகரில் உள்ள கழிவு நீர் ஓடை சுத்தம் மற்றும் கூட்டு துப்புரவு பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE வாகனம் எண் TN 76 AX 1614 தற்போது பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்யும் பொருட்டு, உள்ளூர்விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு**

திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசிம் கருதி, மேற்கண்ட வானத்தை உடன் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 464 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 46</u>**

மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டங்களின் ஒன்றான அரசு பள்ளிகளில் 1 முதல் 5 வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் , இந்நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு இந்நகர் பகுதியில் உள்ள 6 பள்ளிகளில் உள்ள சுமார் 199 மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. இப்பணியினை மேற்கொள்ள வேண்டி கடந்த 29.05.2023 அன்று ஓப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, இந்நகராட்சி மூலம் திரு.ஷேக் அப்துல் காதர் , தென்காசி என்பவருக்கு 07.06.2023 அன்று ஓராண்டுக்கு பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. பணி உத்திரவின் படி மேற்கண்ட ஓப்பந்தக்காரருக்கு கடந்த 06/2024 ம் மாதத்துடன் ஓப்பந்தக்காலம் முடிவு பெற்று விட்டது. இருப்பினும் மேற்கண்ட பணியின் அவசியம் கருதி ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட திரு.ஷேக் அப்துல் காதர் ஓப்பந்தக்காரர் மூலம் நாளது தேதி வரை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்தில் பணி தொடர்ந்த மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஓப்பந்தக்காரர் திரு.ஷேக் அப்துல் காதர் அவர்கள் மேற்கண்ட பணியினை தொடர்ந்து இதே விலைவிகிதத்தில் மேற்காள்ள இயலாது என கூறி வருகிறார். எனவே இப்பணி பாதிப்படையாமல் இருக்க வேண்டி, எதிர் வரும் காலத்திற்கு மேற்கண்ட காலை சிற்றுண்டி திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி புதியதாக ஓப்பந்தப்புள்ளி கோரி, ஓப்பந்தக்காரரை தேர்ந்தெடுக்கும் பொருட்டு, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு**

1. ஓப்பந்தக்காலம் முடிவடைந்த பிறகு உள்ள காலங்களுக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்தில், அனுமதிக்கப்பட்ட ஓப்பந்தக்காரர் மூலம் பணி மேற்கொண்டதற்கும், செலவினம் செய்யப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்
2. புதியதாக ஓப்பந்தப்புள்ளி கோரும் வரை, ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் ஓப்பந்தகாரர் மூலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்
3. புதிய ஓப்பந்தப்புள்ளி கோர சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 465 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 47</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 16 ல் ஓட்டன்குளம் பகுதியில் அமைந்துள்ள தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டியில் உள்ள மின் விசைப்பம்பு அடிக்கடி பழுதாகிவிடுகிறது. மேற்கண்ட தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி மூலம் தினமும்இந்நகர் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டி, மின் விசைப்பம்பு இயக்க வேண்டிய சூழலில் பழுதடைந்த மின் விசைபம்பிற்கு பதிலாக புதியதாக 1250 x100 lpm திறன் கொண்ட மின்விசை பம்பு கொள்முதல் செய்ய ரூ.2.55 இலட்சத்திற்கும், மேலும் நகர் பகுதியில் மேடான பகுதிகளுக்கு

குடிநீர் விநியோகம் சீராக செய்யும் பொருட்டுபுதியதாக சுலீஸ் வால்வு பொருத்த அவசியமாக உள்ளது. எனவே சுலீஸ் வால்வு பொருத்த வேண்டி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 0.37 இலட்சத்தையும் சேர்த்து, மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 2.92 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு**

பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விநியோகத்தின் அவசியம் மற்றும் அவசரம் கருதி மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளவும் , தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கும், செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் 466 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 48</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதிகளில் உள்ள கழிவு நீர் ஓடைகள், முட்புதர்கள் அனைத்தும் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் கொண்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் துப்புரவு பணி யாளர்ளை கொண்டு சுத்தம் செய்ய முடியாத பகுதிகளில் இயந்திரம் மூலம் பணி செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. அதன் படி இந்நகர் பகுதிகளில் ஆங்காங்கே இருக்கும் முட்புதர்கள் வாறுகாலில் உள்ள கழிவுகள் மற்றும் இதரகுப்பைகளை ஜேசிபி இயந்திரம் கொண்டு சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 3.00 இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேகொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு**

பொது சுகாதாரம் மற்றும் பொது மக்களின் நலன் கருதி, மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 467 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 49</u>**

திருநெல்வேலி மாவட்டஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் 174/செ.ம.தொ/செ/2024 நாள் 04.07.2024 ல், தினகரன் நாளிதழ் சார்பில் தமிழக அரசு மூன்றாண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு அரசின் சாதனை சிறப்பு மலர் வெளியிடவுள்ளதை தொடர்ந்து, அரசுத்துறை/அரசு சார்பு நிறுவனங்கள் தங்களது துறைகள் சம்பந்தமான விளம்பரங்களை வழங்கிட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதின் படி, இந்நகராட்சி சார்பில் மூன்றாண்டு சாதனை விளம்பரத்தினை , தினகரன் நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட விளம்பரம் செய்த வகைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.32760/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் 468 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 50</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கணினிகள்மற்றும் பிரிண்டர்கள் கீழ்க்கண்ட விவரப்படி கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு

1. புதிய கணினி (All in one PC) - ரூ. 53800 X 3 எண்ணம் - ரூ. 1,61,400/- ( ஆணையாளர், பொறியாளர், மற்றும் சுகாதார ஆய்வாளர்)
2. புதிய கணினி - ரூ 46300 X 3 எண்ணம் - ரூ. 1,38,900/- ( அலுவலக பயன்பாட்டிற்கு)
3. பிரிண்டர்கள் (With Scanner) - ரூ 18750 X 3 எண்ணம் - ரூ. 56250/- ( அலுவலக பயன்பாட்டிற்கு)
4. டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர் - ரூ 12500 X 2 எண்ணம் - ரூ. 37500/- ( வசூல் மைய பயன்பாட்டிற்கு)

**அலுவலககுறிப்பு**

அலுவலக பணிகளின் அவசியம் கருதியும், ஆணையாளர் மற்றும் பொறியாளர்கள் காணொளி காட்சி ஆய்வுக் கூட்டத்தில் கலந்துக்கொள்ள ஏதுவாகவும், மேற்கண்ட கணினிகள் மற்றும் பிரிண்டர்களை மத்திய , மாநில அரசின் அங்கீகரிக்கப்பட்ட Government e Marketplace (*GeM*) விலைவிகிதத்தில் கொள்முதல் செய்திடவும் , அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 469 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 51**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத் தலைவர் அவர்களின் பயன்பாட்டில் உள்ள Scorpio வாகனம் எண் TN 72 CU 6879 க்கான பொது பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி ஓட்டுநர் அவர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதின் படி, மேற்கண்ட வாகனம் அங்கீகரிக்கப்பட்ட டீலரான டெரிக் ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனம் மூலம் பொது பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணி மேற்கொண்டதற்கு வரப்பெற்ற பட்டியல் கேட்புத் தொகை ரூ., 7127/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலககுறிப்பு**

மேற்கண்ட வாகனம் புதிய வாகனம் என்பதாலும், உரிய காலத்தில் பராமரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாலும், வாகனத்தின் பாதுகாப்பு கருதி உடன் பணி மேற்கொண்டதற்கும்அதற்கான செலவினத் தொகை ரூ. 7127/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் 470 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 52**

தமிழ்நாடு நகரப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ன் படி நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அத்தியாம் (9) பகுதி – I அட்டவணை I, II, மற்றும் III-ல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தார் போல் நிர்ணயம் செய்து உரிமம் வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023-ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தணைகள் மற்றும் விதிமுறைகள் மண்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இதன்படி இந்நகராட்சி பகுதியில் இயங்கி வரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி உரிமக் கட்டணம் 01.04.2024-ஆம் தேதி முதல் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம்**

வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம்-(1) அட்டவணைகள் I, II, மற்றும் III-ல் குறிப்பிட்டுள்ள, பொது அல்லது தனியார் என எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும் ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக்கூடாது.

அத்தகைய உரிம வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், விக்கிரமசிங்கபுரம் நகர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1 - இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

தனி நபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுரும சான்றிதழ் போன்ற அடையாள சான்று.

உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம் 17-இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அட்டவணை 1-ன் கீழான விண்ணப்பங்களுக்கு, நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

உதயம் பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18-இல் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அதன் பயன்பாட்டுக்கு உள் விதி (1)-ன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும், அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணப்பிக்கவேண்டும்

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 விதி (5)ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம், பிரிவு (6)-ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன் படிவம் 1-ல் ஆனையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது உரிமம் பெறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது.

அட்டவணைகள் I, II, III மற்றும் IV-ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் 01.04.2024 தேதி முதல் அமுலுக்கு வரும்.

**குறிப்பு**:- (எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி துவங்கி மார்ச் 31-ம் தேதி முடிவடையும்.

## அட்டவணை I

[See rules 289(1), (2) and (5)]

1. **பொருந்தக்கூடிய** தன்மை

1948 -ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் (1948 -ம் ஆண்டு மத்தியச் சட்டம் LXM) 1951-ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (1951-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 65), 1959 ஆம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884-ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884-ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934-ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934-ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருந்தும்.

2. உரிமக்கட்டணம் :

அ) குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உரிமக் கட்டணம், 2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் படியான(2006-ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27), அத்தகைய தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் விதிக்கப்படும்.

ஆ) அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு பொருட்கள் மற்றும் சேவைகள் வரி எண் அல்லது சமீபத்திய வருமான வரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும் விண்ணப்பதாரர் ஒரு செல்லுபடி ஆகக்கூடிய உதயம் பதிவு சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை எனில்

உரிமம் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்று அளித்து படிவம் 17 இல் உள்ள பிரமாண பத்திரம் ஒன்றை அவர் சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ல் குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கிட உரிமை கட்டணம் நிர்ணயம் செய்திட குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொழில் உரிமை கட்டணங்களுக்காக பட்டியல்

(A) குறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 1500/- | 3500/- |

(B) சிறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/- | 5000/- |

(C) நடுத்தர தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 7500/- | 10000/- |

(D) நடுத்தர தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 10000/- | 35000/- |

**வர்த்தகங்கள் / வியாபாரங்கள் பட்டியல் : (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| வ. எண் | வர்த்தகங்கள் / வியாபாரங்கள் பட்டியல் | அ)குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | ஆ)சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | இ)நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | ஈ)மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு தயாரிப்புகளை உற்பத்தி | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்தல் | | | | |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து வைத்து விற்பனை செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 7 | காகித தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 9 | அனைத்து வகையான கொள்கலன்களையும், பாத்திரங்களையும் உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 10 | அனைத்து வகையான மோட்டார்கள் (மின்மோட்டார்கள் அல்லாத) மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 11 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 12 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 13 | அனைத்து வகையான கட்டுமான பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 14 | அனைத்து வகையான பொறியியல் பணிகள் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 15 | செங்கல் சூளைகள் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 17 | அனைத்து வகையான ஒப்பனைப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 18 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள் ஒப்பனைப் பொருட்கள் மற்றும் மூலிகை பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 19 | அனைத்து வகையான கட்டுறுவாக்க பணிகள் (Fabric Works) | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் மெருகுக்கூட்டல் | | | | |
| 21 | அனைத்து வகையான ரசாயன பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 22 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 25 | கொதிக்கலன் உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 26 | காற்றுப்பதனிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 27 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 28 | அனைத்து வகையான எழுது பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 29 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 30 | அனைத்து வகையான வீட்டு உபயோகப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 31 | பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 32 | பேட்டரிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 33 | மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 34 | அணிகலன்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 35 | இசைக்கருவிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 36 | துப்புரவு பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 37 | சுண்ணாம்பு கால்வாய் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 40 | அனைத்து வகையான தொல்பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 41 | அனைத்து வகையான மர / பிளைவுட் / சன்மைக்கா | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொருட்களை உற்பத்தி செய்தல் | | | | |
| 42 | அனைத்து வகையான வன்பொருட்களை (Hardwares) உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 43 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 44 | அனைத்து வகையான வேளாண் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 45 | அனைத்து வகையான உணவெண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 46 | பால் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 47 | டீ (Tea) தூள் தயாரித்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |
| 48 | காபி (Coffee) தூள் தயாரித்தல் | 1500/- | 2000/- | 2500/- | 3000/- |

## அட்டவணை II

[See rules 289(1), (2) and (5)]

**1. பொருந்தும் தன்மை**

(1). இந்த அட்டவணை எந்த ஒரு வர்த்தகம் அல்லது வியாபாரம் மேற்கொள்ளப்படுகிற அல்லது வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் அளிக்கப்படுகிற எந்த ஒரு கடை அல்லது வணிக நிறுவனத்திற்கும் அதே வளாகத்தில் உள்ளதோ அல்லது பிறவாறாக உள்ளதோ அத்தகைய வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சரக்கு அறைகள் கிடங்குகள் மற்றும் பண்டகசாலைக்கும் பொருந்தும்.

(2). பின்வரும் வகைப்பாடுகளுக்கு இந்த அட்டவணை பொருந்தாது:-

1. இந்த விதிகளின் மற்ற அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ள வகைப்பாடுகள்
2. 2013 ஆம் ஆண்டு நிறுவன சட்டத்தின் கீழ் ( 2013-ஆம் ஆண்டு மத்திய சட்டம் 18) பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள்.
3. சம்பந்தப்பட்ட சட்டங்களின் கீழ் உரிமம் பெற்ற உலாவல் மையங்கள் (Browsing centers) மற்றும் உடற்பயிற்சி கூடங்கள்/
4. 1948 -ம் ஆண்டு படைக்கல சட்டம் (1959 -ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54) 1884-ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884 -ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934-ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934-ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) மற்றும் 1952 -ம் ஆண்டு ஒளிப்பதிவு சட்டத்தின் கீழ் (1957 -ம் ஆண்டு மத்தியச் சட்டம் 37) உரிமம் பெற்ற வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள் மற்றும்

   தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அட்டவணை II-ல் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொழில் உரிம கட்டணங்களுக்கான பட்டியல்

**1) உரிமக்கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 700/- | 3000/- |

2) வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள் பட்டியல் :

| வ. எண் | வர்த்தகங்கள் / வியாபாரங்கள் பட்டியல் | அ)குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் ரூபாயில் | ஆ)சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | இ)நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | ஈ)மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| 1 | அரசால் அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 2 | தையல் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 3 | தையல் இயந்திரங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 4 | அனைத்து வகையான கையால் செய்யப்பட்ட பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 5 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 6 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு சர்வீஸ் மையங்கள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 7 | அனைத்து வகையான காகித பொருட்களையும் சேமித்து வைத்தல்.மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 8 | கழிவுத்தாள் கடை / பழைய வேண்டாத பொருட்கள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 9 | நூற்பு வேலைகள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 10 | அனைத்து வகையான இயந்திர | 700/- | 800/- | 900/- | 1000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | | | | |
| 11 | காற்று பதனிகளை பழுது பார்த்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 12 | காற்றழுத்திகள் (Air Compressors) | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 13 | அனைத்து வகையான உலோகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 14 | எடை இயந்திர நிலையங்கள் (Weighing Macines) | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 15 | பேட்டரி சார்ஜ் செய்கிற கடைகள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 16 | மோட்டார் வாகன ஷோரூம்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 17 | தலைக்கவச கடைகள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 18 | இருசக்கர வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுதுபார்ப்பு மையங்கள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 19 | இலகுரக மோட்டார் வாகனங்கள் மற்றும் கலராக மோட்டார் வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுது பார்ப்பு மையங்கள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 20 | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளையும் சேமித்து வைத்தல் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 21 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 22 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 23 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 24 | அனைத்து வகையான ரசாயன பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 25 | பூச்சிக்கொல்லி மருந்துகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 26 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 27 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 28 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 29 | அனைத்து வகையான வன்பொருட்களையும் ஹார்டுவேர்ஸ் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 30 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 31 | அனைத்து வகையான இடது பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 32 | அனைத்து வகையான கட்டுமான பொருட்களையும் | 700/- | 800/- | 900/- | 1000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | | | | |
| 33 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 34 | அனைத்து வகையான வீட்டு உபயோக உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 35 | அணிகலன்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 36 | இசைக்கருவிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 37 | துப்புரவு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (தளவாட சாமான்கள்) | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 40 | அனைத்து வகையான மறுப்பட்டை இடப்பட்ட டயர்கள் / டயர்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 41 | அனைத்து வகையான கொள்கலன்கள் மற்றும் பாத்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 42 | அனைத்து வகையான அரைகலன்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 43 | அனைத்து வகையான மர பிளைவுட் சன் மைக்கா பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 44 | மர வடிவமைப்புகள் விற்பனை | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 45 | சாமியான மற்றும் பாத்திரங்களை வாடகைக்கு விடுதல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 46 | அனைத்து வகையான தோள் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 47 | கண் கண்ணாடிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 48 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 49 | அனைத்து வகையான கைக்கடிகாரம் மற்றும் கைக்கடிகார உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 50 | அழைப்பிதழ்கள் வாழ்த்து அட்டை விற்பனை / அர்ச்சகம், கணிப்பொறி பதிப்பகம் உட்பட | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 51 | மருந்து கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 52 | மருத்துவ உபகரணங்கள் / சாதனங்கள் மற்றும் உட்பொருத்திகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 53 | மூங்கில் தென்னை ஓலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 54 | எரியக்கூடிய பொருட்கள் பிலிம் செல்லுலாய்ட் | 700/- | 800/- | 900/- | 1000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | | | | |
| 55 | புல் மற்றும் வைக்கோல்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 56 | முட்டுக் கொடுக்கும் பொருட்களை (Centering Materials) வாடகைக்கு விடுதல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 57 | அனைத்து வகையான வேளாண் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 58 | அனைத்து வகையான உரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 59 | திரைப்பட செயலாக்கம் மற்றும் வண்ணமயமாக்கல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 60 | வாகன நிறுத்த நிலையங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 61 | திரைப்பட ஆய்வகங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 62 | பார்சல் புக் செய்யும் இடங்கள் / தூதர்கள் (Courier) சேவைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 63 | கேபிள் டிவி சேவைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 64 | கேடயங்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 65 | உள்நாட்டு பட்டுப்புழு வளர்ப்பு பொருட்கள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 66 | பட்டாணி வறுவல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 67 | ஃபேன்சி ஸ்டோர் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 68 | பஞ்சு மெத்தை / தலையணை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 69 | மிதிவண்டி பழுதுபார்க்கும் கடைகள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 70 | பல் பொருள் அங்காடி | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 71 | ஜெராக்ஸ் கடை, கணிப்பொறி பதிப்பக மையங்கள், இ-சேவை மையம் மற்றும் இணையம் நிலையம் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 72 | ஸ்டிக்கர் கடைகள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 73 | தாவர நாற்றங்கால் கடைகள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 74 | புகைப்பட சட்டகம் செய்தல் (Photo Framing Works) | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 75 | தார்பாலின்களை சேமித்து வைத்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 76 | பொற்கொல்லர்கள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 77 | அனைத்து வகையான துப்புரவு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (கிருமி நாசினிகள்) | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 78 | டைல்ஸ் / மார்பிள்ஸ் / மார்பில்கள் / கிரானைட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 79 | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 80 | முடிவெட்டும் நிலையங்கள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 81 | அழகு நிலையங்கள் / தடுப்பு சுவர்கள் அல்லது அறைகள் இல்லாத ஸ்பாஸ் (Spa's) | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 82 | தையல் கடைகள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 83 | சலவையகங்கள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 84 | வினைல் போர்டு கடைகள் | 700/- | 800/- | 900/- | 1000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 85 | காலனி கடைகள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 86 | கைப்பேசி கடைகள் (விற்பனை மற்றும் பழுதுபார்த்தல்) | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 87 | மிதிவண்டி மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 88 | புகைப்படம் எடுக்கும் நிலையங்கள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 89 | திரைப்படங்கள் எடுக்கும் நிலையங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 90 | பதிவு செய்யும் நிலையங்கள் (Recording Theater) | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 91 | அச்சகங்கள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 92 | அனைத்து வகையான அச்சிடுதல்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 93 | துணிகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 94 | நகைகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 95 | நெல் அவித்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 96 | மரம் அறுக்கும் ஆலைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 97 | FCS ஆலைகள் (Farm and commercial Storage | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 98 | அரிசி ஆலைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 99 | பாக்கெட்டில் போடப்பட்ட கறியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 100 | கோழி இறைச்சினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 101 | ஆட்டு இறைச்சியை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 102 | கோழி இறைச்சி / ஆட்டு இறைச்சி சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 103 | மாட்டு இறைச்சினை சேமித்து வைத்தல் மற்றும் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விற்பனை செய்தல் | | | | |
| 104 | கடல் உணவுகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 105 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் தயார் செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 106 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 107 | அனைத்து வகையான உணவு எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 108 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 109 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 110 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள் ஒப்பனை மற்றும் மூலிகை பொருட்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 111 | மருத்துவ ஆய்வகங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 112 | அனைத்து வகையான செல்லப்பிராணிகள் கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 113 | அனைத்து வகையான கால்நடைகள் பறவைகள் தீவனங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 114 | காபி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 115 | பால் மற்றும் பால் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 116 | காய்கறிகள் பழங்கள் மற்றும் பூக்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 117 | அனைத்து வகையான மளிகை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 118 | பேக்கரிகள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 119 | பழச்சாறு கடைகள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 120 | AMF (Assured Minimum Facility) உடன் டீக்கடைகள் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 121 | நீர்வாழ்வன காட்சிசாலை (Aquarium) | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 122 | ஊற வைத்த தானியங்களை அரைத்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 123 | சுற்றுலா மற்றும் பயணங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 124 | மண் அள்ளும் இயந்திரங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 125 | கட்டிட பொருட்களை வாடகைக்கு எடுத்தல் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 126 | புளோர் மில் அரிசி / கோதுமை, சீயக்காய்,மிளகாய் | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 127 | புகையிலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 128 | பட்டாசு சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 129 | பொரி கடலை விற்பனை | 700/- | 800/- | 900/- | 1000/- |
| 130 | பெட்ரோல் பங்க் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 131 | இப்பட்டியலில் சொல்லப்படாத இதர இனங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

## அட்டவணை III

[See rules 289(1), (2) and (5)]

**1. பொருந்தும் தன்மை :-**

(1). தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கை கூடங்களுடன் கூடிய உணவுக்கூடங்கள் சிற்றுண்டி சாலை அல்லது உணவகங்கள்

(2).1939-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார சட்டத்தில் வரையறுக்கப் -பட்டுள்ளவாறான, வாராந்திர, மாதாந்திர, அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற தங்கும் இடங்கள் தங்கும் விடுதிகள், சத்திரம், மளிகை, விருந்தினர் இல்லம், மற்றும் சமையல் செய்யும் வசதியுடன் கூடிய தங்கும் விடுதி (Service Apartments)

(3).திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக்கூடங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்கான அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பொது கூட்டங்களாக பயன்படுத்தப்படுகிற அனைத்து பொதுக் கூட்டங்களுக்கும் பொருந்தும்.

**2. உரிமக்கட்டணம் ( ஒரு வருடத்திற்கான கட்டணம்) :-**

(i). தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கை கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள் சிற்றுண்டி சாலை அல்லது உணவகங்கள் விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிம கட்டணம் குறைந்தபட்சம் ரூ.1000/- அதிகபட்ச கட்டணம் ரூ.15000/-

**(ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| தொழில் விபரம் | 200 சதுர அடி வரை | 1000சதுர அடி | 1000 சதுர அடிக்கு மேல் |
|---|---|---|---|
| (i)தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கை கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள் சிற்றுண்டி சாலை அல்லது உணவகங்கள் விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிம கட்டணம் | 1000/- | 2000/- | 3000/- |
| ii) 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் முறைப்படுத்துதல் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள் - | 2000 சதுர அடிகள் வரை | 2001 முதல் 3000 சதுர அடிகள் வரை | 3001 சதுர அடிக்கு மேல் |
| | 1500/- | 2000/- | 2500/- |
| iii) 1939- ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்ட வாரான வாராந்திர மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற | 3000 சதுர அடிகள் வரை | 3001 முதல் 5000 சதுர அடிகள் வரை | 5001 சதுர அடிக்கு மேல் |

| | | | |
|---|---|---|---|
| தங்கும் இடங்கள், சத்திரம், மளிகை விருந்தினர், இல்லம் சேவை அடுக்குமாடி குடியிருப்புகள், | 3000/- | 5000/- | 10000/- |
| (iv) திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களைகொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள் | **2000 சதுர அடிகள் வரை** | **2001 முதல் 5000 சதுர அடிகள் வரை** | **5000 சதுர அடிக்கு மேல்** |
| | 3000/- | 5000/- | 10000/- |

**அட்டவணை-IV**

[விதிகள் 282 (11) மற்றும் 286 (2) பார்க்கவும்]

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 2000/- | 30000/- |

| **தொழில் விபரம்** | **2000 சதுர அடிகள் வரை** | **2001 முதல் 5000 சதுர அடிகள் வரை** | **5001 முதல் 10000 சதுர அடிகள் வரை** | **10001 சதுர அடிக்கு மேல்** |
|---|---|---|---|---|
| தனியார் பார்க்கிங் ஸ்டாண்ட் மற்றும் தங்குமிடம் (ஆண்டுக்கு விகிதம்)= | 2000/- | 3000/- | 4000/- | 5000/- |

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 2000/- | 20000/- |

| **தொழில் விபரம்** | **2000 சதுர அடிகள் வரை** | **2001 முதல் 5000 சதுர அடிகள் வரை** | **5001 முதல் 10000 சதுர அடிகள் வரை** | **10001 சதுர அடிக்கு மேல்** |
|---|---|---|---|---|
| தனியார் ஸ்லாட்டர் ஹவுஸ் (ஆண்டுக்கு விகிதம்) | 2000/- | 4000/- | 10000/- | 15000/- |

**அலுவலக்குறிப்பு:-**

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் அமைப்பு விதிகள் 2023-ன் படி தொழில் உரிமம் (Trade License fees) கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றம் பதிவு செய்யவும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களக்கு க-ருத்துறு சமர்ப்பித்திடவும் மன்றம் அனுமதி வழுங்கலாம் .

**தீர்மான எண் 471 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

ஓம்) திரு. எஸ்.பி.எம்.செல்வ சுரேஷ் பெருமாள்

**நகர்மன்றத் தலைவர்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி

Win2PDF®

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/